செ.வெ.எண்.89 நாள்.28.07.2017

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலை கண்காட்சியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன், அவர்கள், ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தொடங்கி வைத்தார்.

------

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலை கண்காட்சி தொடக்க விழா இன்று (28.07.2017) நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன், அவர்கள், ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தோட்டக்கலை கண்காட்சியினை தொடங்கி வைத்தார்.

பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தமிழகத்தின் பாரம்பரிய மிக்க விழாவான குற்றால சாரல் விழா நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. இவ்விழாவினை மேலும் சிறப்பிக்கும் வகையில் குற்றாலம் ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலை கண்காட்சி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சி இன்று முதல் 02.08.2017 வரை 7 நாட்களுக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது. தோட்டக்கலை கண்காட்சியில் வாசனை திரவிய கண்காட்சி, மலர் கண்காட்சி, வீட்டு காய்கறி தோட்டத்தினை ஊக்குவிக்கும் வகையில், வீட்டு காய்கறி தோட்ட கண்காட்சி, பரம்பரிய உணவு கண்காட்சி, மகேந்திரகிரி விண்வெளி ஆராய்ச்சி மையத்தால் அமைக்கப்பட்ட கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில், மலர்களால் ஆன நடன மங்கைகள், டால்பின்கள் மற்றும் பெங்குயின் ஆகியவைகளும் ஒரு டன் எடையுள்ள பல்வேறு காய்கறிகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ள வண்ணத்துபூச்சி, டிராகன், மயில், சிம்பன்சி, வரிக்குதிரை, பஞ்சவர்ண கிளி உள்ளிட்ட உருவங்கள் காண்போரை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், செல்பி புகைப்படம் எடுத்து கொள்ளும் வகையில் 2500 ரோஜா மலர்களால் வடிவமைக்கப்பட்ட செல்பி ஸ்பாட்டும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. குற்றாலத்திற்கு வருகை தரும், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் தோட்டக்கலை கண்காட்சியினையும் அவசியம் கண்டு களிக்கும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய துணைத் தலைவர் திரு.கண்ணன்(எ) ராஜா, ஆவின் தலைவர் திரு.ச.ரமேஷ், நெசவாளர்மற்றும் உற்பத்தியாளர்கள் சேவை சங்கத் தலைவர் திரு.வே.ஆறுமுகம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திரு.கண்ணன், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டம்) திரு.முகைதீன், குற்றாலம் தோட்க்கலை பண்ணை மேலாளர் திரு.சிவகுமார், தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி.ஜெயபாரதி மாலதி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் , சுற்றுலாப் பயணிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி